**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No.220/2018 |
| Deposition of witness | PW- 3 /AW- 1 |
| Name | திரு.வீரபாண்டியன் |
| Father's Name | திரு. சிங்காரம் |
| Village | மட்டங்கால் |
| Taluk | கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை |
| Age | 29/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 6th day of June 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வாட்டாதிக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் அ.சா.1 முருகேசன் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதாகவும், நான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான முத்துக்குமார் SI என்பவரின் கையெழுத்து பரிசீட்சையம் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.07.2018 அன்று வாட்டாதிக்கோட்டை காவல் நிலைய முத்துக்குமார் SI நிலைய பொறுப்பில் இருந்தபோது முருகேசன் என்பவர் கொடுத்த வாக்குமுலத்தை பெற்று 14.07.2018 நிலைய குற்ற எண்.104/2018, ச/பி. 294(b),341,355,506(2) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் **பெற்ற புகார் மனு அ.சா.ஆ 2 ஆகும்.** அவர் **பதிந்த முதல் அச்சு தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.** அவர் பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அப்துல்காதர், ராசு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகசர் அசாஆ 4 மற்றும் மாதிரிவரைப்படம்**

**அசாஆ.5 ஆகும்.** பின்பு பார்வை மகசர் சாட்சிகள் அப்துல்காதர், ராசு ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவ சாட்சிகள் முருகேசன், ரெங்கராஜன், சூரியமூர்த்தி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது அன்றைய தினமே வா.கொல்லைகாடு டாஸ்மார்க் அருகே கைதுக்கான காரணம் கூறி எதிரி செந்தில்குமார் என்பவரை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இறுதியாக 19.07.2018 இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது ச/பி. 341,294(b),355,506(2) இதச பிரிவுகள் படி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை